நாள். 21.02.2024

STC No. 120/2021

ம.சா. 2

திரு. நசீர், Indian Bank, முதுநிலை மேலாளராக, பென்னாகரம்.

த/பெ. ஷாஜகான்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்தியன் வங்கி பென்னாகரம் கிளையில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையினை பெற்று அதில் பணிக்கப்பட்டிருந்த ஆவணங்களை கொண்டு வந்து சாட்சியமளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட சதிஷ்குமார் த/பெ. மணோகரன் என்பவர் சேமிப்பு கணக்கு எண். 615819080 என்ற எண்ணில் எங்களது வங்கியில் கணக்கு வைத்துள்ளார். அவரது வங்கி கணக்கு விபரப்பட்டியலை தாக்கல் செய்கிறேன்.

1. 01.01.2019 முதல் 21.02.2024 வரையிலான புகார்தாரரின் வங்கி கணக்கு விபரப்பட்டியல் **ம.சா.ஆ.10** ஆகும்.

2. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1,2 காசோலைகளானது காசோலை வழங்கியவரின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. வேறு எந்த காரணத்திற்காகவும் திருப்பப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

1. நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 01.01.2019 முதல் 21.02.2024 வரையிலான புகார்தாரரின் வங்கி கணக்கு விபரப்பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். 01.01.2019 முதல் 31.03.2021 வரை எந்தவொரு பணப்பரிவர்த்தனையும் நடந்ததாக ம.சா.ஆ.10 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக காசோலையில் காசோலை சம்பந்தப்பட்ட நபர் கையொப்பம் செய்து கொடுத்தால் அதனை யார் வேண்டுமானாலும் பூர்த்தி செய்து பயன்படுத்திக்கொள்ளலாம் என்றால் சரிதான். பொதுவாக ஒரு காசோலை வசூலுக்கு வரும்போது முதலில் கையொப்பம் சரியாக உள்ளதா? தொகை எண்ணாலும்,

எழுத்தாலும் ஒரே மாதிரியாக உள்ளதா? அல்லது வேறுபாடு உள்ளதா? என்பதை பரிசோதித்து விட்டு காசோலையை கலெக்சனுக்கு செலுத்திவிடுவோம்.

2. காசோலை செலுத்தப்படாமல் திருப்பப்படாமல் திருப்பப்படும் சமயத்தில் Cheque return charges காசோலையை வசூலுக்கு செலுத்தியவரின் வங்கி கணக்கில் பிடித்தம் செய்யப்படும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**